(22) 160872

1979 - 8 - 9

Sri Lanka

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1979 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பெற்ரோலியப் பொருட்கள் (வழங்கல்களை ஒழுங்குபடுத்துதலும் கட்டுப்படுத்துதலும்) சட்டம்.

---

[1979, மே மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1979, யூன் மாதம் 08 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.75 தபாற் செலவு : சதம் 50

# 1979 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பெற்றோலியப் பொருட்கள் (வழங்கல்களை ஒழுங்குபடுத்துதலும் கட்டுப்படுத்துதலும்) சட்டம்

[1979, மே மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 15/79

பெற்றோலியப் பொருட்கள் நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதனை உறுதிப்படுத்தும் நோக்குடனும் அவற்றின் வழங்கல்களைப் பேணிக்காக்கும் நோக்குடனும், அத்தகைய பொருட்களின் பகிர்ந்தளிப்பையும் பயன்பாட்டையும் ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் ஏற்பாடுசெய்வதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. (1) இச்சட்டம், 1979 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பெற்றோலியப் பொருட்கள் (வழங்கல்களை ஒழுங்குபடுத்துதலும் கட்டுப்படுத்துதலும்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதிகளும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பின்வருமாறு நடைமுறைக்கு வருதல் வேண்டும் :—

(அ) இப்பிரிவின் ஏற்பாடுகளும், இச்சட்டத்தின் I ஆம், IX ஆம் பாகங்களின் ஏற்பாடுகளும் இச்சட்டம் இயற்றப்படும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டத்தின் II ஆம், III ஆம், IV ஆம், V ஆம், VI ஆம், VII ஆம், VIII ஆம் பாகங்களின் ஏற்பாடுகள் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியில் அல்லது தேதிகளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும். இச்சட்டத்தின் வெவ்வேறு பாகங்கள் தொடர்பில் வெவ்வேறு தேதிகள் நியமிக்கப்படலாம்.

(3) இச்சட்டத்தின் ஏதேனும் பாகம், (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின்மூலம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகின்றவிடத்து, அத்தகைய கட்டளையானது அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் அதேபோன்ற கட்டளைமூலம் இல்லாதாக்கப்படுகின்றவரையில் அப்பாகத்தின் ஏற்பாடுகள் நடைமுறையில் தொடர்ந்து இருந்துவருதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் ஏதேனும் பாகத்தை நடைமுறைக்கு கொண்டுவருவதும், (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்படுவதுமான கட்டளையொன்றை இல்லாதாக்குகை, அத்தகைய இல்லாதாக்குகையின் பின்னர் எந்நேரத்திலும் அப்பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட பின்னைய கட்டளையொன்றன்மூலம் அத்தகைய பாகத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவத்தைப் பங்கப்படுத்துவதாகக் கருதப்படுதல் ஆகாது.

2—எ 40766-6,900 (04/79)

## பாகம் I

### நிருவாகம்

அலுவலர்களை யும் சேவையா ளர்களையும் நிய மித்தல்.

2. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக—

(அ) பெற்றோலியப் பொருள் அதிகாரி ஒருவரும், (அவர் இச்சட்டத்தில் " அதிகாரி " எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றிவைக்கும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பெற்றோலியக் கட்டுப்பாட்டாளர்களும், பெற்றோலியப் பிரதிக் கட்டுப்பாட்டாளர்களும், பெற்றோலிய - உதவிக் கட்டுப்பாட்டாளர்களும் பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து நியமிக்கப்படலாம் ;

(ஆ) இச்சட்டத்தை நிருவகிப்பதில், (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அலுவலர்களுக்கு உதவிபுரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களும் சேவையாளர்களும் நியமிக்கப்படலாம்.

(2) அதிகாரியானவர், இச்சட்டத்தின்மூலம் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை எவரேனும் பெற்றோலியக் கட்டுப்பாட்டாளருக்கு, பெற்றோலியப் பிரதிக் கட்டுப்பாட்டாளருக்கு அல்லது பெற்றோலிய உதவிக் கட்டுப்பாட்டாளருக்கு எழுத்தில் கையளிக்கலாம்.

## பாகம் II

### பெற்றோல் விற்பனை முதலியவற்றின் மீதான மட்டுப்பாடு

**பெற்றோல் கொள்வனவின் மீதான மட்டுப் பாடு.**

3. இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், விற்பனையாளரல்லாத ஆள் எவரும்; அவர் அங்கீகரிக்கப்பட்ட பெற்றோல் பாவனையாளர் ஒருவராகவும் பெற்றோல் தொடர்பில் அதிகாரியினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரம் ஒன்றை வைத்திருப்பவராகவும் இருந்தாலன்றி, பெற்றோலைக் கொள்வனவு செய்தலோ அல்லது பெற்றுக்கொள்ளுதலோ ஆகாது.

குறித்த சில ஆட்கள் பெற்றோல் பாவனை யாளர்களாக அங்கீகரிக்கப் பட்டிருக்கின்ற னர் எனக் கரு தப்படல்.

4. (1) மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் பெற்றோலினால் செலுத்தப்படும் மோட்டார் வாகனம் ஒன்றின் சொந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றவரும், அச்சட்டத்தின்கீழ் அவ்வாகனம் தொடர்பில் வழங்கப்பட்ட—

(அ) பதிவுச் சான்றிதழொன்றை ;

(ஆ) செல்லுபடியான அரசிறை உரிமமொன்றை ; அத்துடன்

(இ) செல்லுபடியான காப்புறுதிச்சான்றிதழொன்றை,

வைத்திருக்கின்றவருமான ஒவ்வோர் ஆளும், அவர் அவ்வாறு பதிவுசெய்யப்பட்டிருக்கும் வரையில், பதிவுசெய்யப்பட்டிருக்கும் வரையில் மட்டுமே, இச்சட்டத்தின்கீழ் பெற்றோல் பாவனையாளர் ஒருவராக அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றார் எனக் கருதப்படல் வேண்டும்.

(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் பயனுக, பெற்றோல் பாவனையாளர் ஒருவராக இச்சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்டவரெனக் கருதப்படுகின்ற எவரேனும் ஆள், ஏதேனும் காலப்பகுதியின்போது எவ்வளவு பெற்றோலைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்படவேண்டும் என்பதை அதிகாரி தீர்மானிப்பதனை இயலச் செய்வதற்காக அவருக்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய தகவலைக் கொடுத்துதவும்படி அதிகாரி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் பயனுக, பெற்றோல் பாவனையாளராக இச்சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்டவரெனக் கருதப்படுகின்ற எவரேனும் ஆளை, அங்கீகாரம் பெறுவதற்கு 5 ஆம் பிரிவின் கீழ் விண்ணப்பிக்கும்படி இச்சட்டத்திலுள்ள எதுவும் தேவைப்படுத்துவதாக வாசிக்கப்படுதலோ பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது.

**பெற்றோல் பாவனையாளராக அங்கீகாரம் பெறுவதற்கான விண்ணப்பம்.**

5. (1) பெற்றோல் பாவனையாளரொருவராக ஆளொருவர் அங்கீகாரம் பெறுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், அதிகாரிக்குச் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்விண்ணப்பம் பின்வருவனவற்றைத் தருதலும் வேண்டும் : அதாவது—

(அ) எந்த வாகனத்திற்கு, கலத்துக்கு, வானூர்திக்கு, பொறித்தொகுதிக்கு அல்லது எந்திரத்தொகுதிக்குப் பெற்றோல் தேவைப்படுகின்றதோ அந்த வாகனம், கலம், வானூர்தி, பொறித்தொகுதி அல்லது எந்திரத்தொகுதி பற்றிய விவரணமும், வாகனம் ஒன்றின் விடயத்தில் அதன் பதிவிலக்கமும், இன வகையும் பரிவலுவும் ;

(ஆ) அத்தகைய வாகனம், கலம், வானூர்தி, பொறித்தொகுதி அல்லது எந்திரத்தொகுதி எந்நோக்கத்துக்குப் பயன்படுத்தப்படவேண்டுமெனக் கருதப்படுகின்றதோ அந்நோக்கம் ;

(இ) விண்ணப்பம் செய்யப்பட்ட தேதிக்கு முற்போந்த பன்னிரண்டு மாத காலப்பகுதியின்போது விண்ணப்பகாரரினுல் கொள்வனவு செய்யப்பட்ட பெற்றோலின் மாதாந்தச் சராசரி அளவு ;

(ஈ) அத்தகைய தேதிக்குப் பின்னர் விண்ணப்பகாரருக்குத் தேவையான பெற்றோலின் மதிப்பிடப்பட்ட மாதாந்தச் சராசரி அளவு ;

(உ) விதித்துரைக்கப்படக்கூடியவாறுன அத்தகைய வேறு கருமங்கள் பற்றிய விபரங்கள்.

(2) ஒரு வாகனத்தின், கலத்தின் அல்லது வானூர்தியின் தாங்கியில் அல்லாது வேறுவகையில் பெற்றோல் விநியோகத்தைப்பெற விரும்பும் விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும், பெற்றோல் விநியோகத்தை அவர் எந்த முறையில் பெற உத்தேசிக்கின்ருரோ அந்த முறையையும், அத்தகைய முறையில் விநியோகம் செய்யும்படி தேவைப்படுத்துவதற்கான அவரது காரணங்களையும் தமது விண்ணப்பத்தில் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்கான விண்ணப்பப் படிவங்களை அதிகாரி ஏற்பாடுசெய்யலாம் என்பதுடன், அத்தகைய படிவங்கள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவிடத்து, அவ்வாறு ஏற்பாடுசெய்யப்பட்ட படிவத்தில் விண்ணப்பம் செய்யப்படுதலும் வேண்டும்.

*பெற்றோல் பாவனையாளராக எவரேனும் ஆளை அங்கீகரிக்க மறுப்பதற்கு அதிகாரிக்குள்ள தத்துவம்.*

6. (1) அதிகாரியானவர்—

(அ) இலங்கையிலுள்ள பெற்றோல் கையிருப்புக்களையும்;

(ஆ) பகிரங்க நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கும், அத்தியாவசியமான சேவைகளைப் பேணுவதற்கும் என அத்தகைய கையிருப்புக்களைப் பேணிக்காப்பதற்கான அவசியத்தையும்; அத்துடன்

(இ) ஆள் ஒருவருக்கு எந்நோக்கங்களுக்காகப் பெற்றோல் தேவைப்படுகின்றதோ அந்நோக்கங்களையும்,

கவனத்திற்கொண்டு பார்க்கும்போது, பெற்றோல் வழங்கல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அத்தகைய ஆளுக்கு அதிகாரத்தை வழங்குதல் ஆகாது எனத் திருப்தியடைவாரெனில், அத்தகைய எவரேனும் ஆளைப் பெற்றோல் பாவனையாளர் ஒருவராக அங்கீகரிக்க மறுக்கலாம்.

(2) எவரேனும் ஆளைப் பெற்றோல் பாவனையாளர் ஒருவராக அங்கீகரிக்க அதிகாரி மறுக்குமிடத்து—

(அ) அதிகாரி, அத்தகைய ஆளின் விண்ணப்பத்தில் அவரால் குறித்துரைக்கப்பட்ட முகவரிக்குப் பதிவஞ்சலில் அனுப்பப்படும் கடிதம்மூலம் அத்தகைய மறுப்புப்பற்றிய அறிவித்தலைக் கொடுத்தல்வேண்டும்;

(ஆ) அந்த ஆள், அத்தகைய அறிவித்தல் கிடைத்ததிலிருந்து இரண்டு வாரங்களுக்குள், அவ்வாறு மறுத்தமைக்கு எதிராக அமைச்சரின் அமைச்சினது செயலாளருக்கு மேன்முறையீடு ஒன்றைச் செய்யலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மீது செயலாளரின் முடிவு இறுதியானதாகவிருத்தல் வேண்டும்.

*அங்கீகரிக்கப்பட்ட பாவனையாளர்களுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.*

7. (1) ஆளொருவர், பெற்றோல் பாவனையாளர் ஒருவராக அங்கீகரிக்கப்படுகின்றவிடத்து அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ளவராகக் கருதப்படுகின்றவிடத்து, அதிகாரி—

(அ) இலங்கையில் அப்போதைக்குக் கிடைக்கத்தக்கதாகவிருக்கும் பெற்றோல் கையிருப்புக்களையும்;

(ஆ) அத்தகைய கையிருப்புக்களைப் பகிரங்க நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கும் அத்தியாவசியமான சேவைகளைப் பேணுவதற்கும் எனப் பேணிக்காப்பதற்கான அவசியத்தையும்; அத்துடன்

(இ) அத்தகைய ஆளுக்குப் பெற்றோல் எந்நோக்கத்திற்குத் தேவைப்படுகின்றதோ அந்நோக்கத்தையும்,

கவனத்திற்கொண்டு, ஏதேனும் காலப்பகுதியின்போது அந்த ஆள் பெற்றுக்கொள்ள அதிகாரமளிக்கப்படக்கூடிய பெற்றோலின் அளவைக் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கலாம் என்பதுடன், அவருக்கு ஒன்றோ பலவோ வாய அனுமதிப் பத்திரங்களையும் வழங்கலாம்; அக்காலப்பகுதியின்போது

பெற்ரோலின் அந்த அளவை அவர் பெற்றுக்கொள்வதனை இயலச் செய்வதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினவான கூப்பன்கள் அந்த அனுமதிப் பத்திரங்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் காலப்பகுதியின்போது அங்கீகரிக்கப்பட்ட பாவனையாளர் ஒருவர் பெற்றுக்கொள்ள அதிகாரமளிக்கப்படக்கூடிய பெற்ரோலின் அளவை (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரி நிர்மானித்துள்ளவிடத்து, அவர் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) என்னும் பந்திகளில் தரப்பட்டுள்ள கருமங்களைக் கவனத்திற்கொண்டு அக்காலப்பகுதியின்போது எந்நேரத்திலும் அத்தகைய நிர்மானத்தை வேறுபடுத்தலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் எதுவும், அத்துடன் அத்தகைய அனுமதிப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ள கூப்பன் எதுவும், அத்தகைய அனுமதிப்பத்திரம் அல்லது கூப்பன் எந்தக் காலப்பகுதி தொடர்பில் வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின் போது தவிர செல்லுபடியானதாகவிருத்தல் ஆகாது.

(4) எவரேனும் ஆள் சில்லறை விற்பனவு நிலையம் ஒன்றல்லாத ஏதேனும் இடத்தில் பெற்ரோலைக் கொள்வனவு செய்ய அல்லது பெற்றுக் கொள்ள அனுமதிப்பத்திரம் எதுவும் அதிகாரமளித்தல் ஆகாது:

ஆயின், எவ்வாறாயினும், அதிகாரி அங்கீகரிக்கப்பட்ட பெற்ரோல் பாவனையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றில் செய்யப்பட்ட பதிவீட்டின்மூலம் பெற்ரோலைக் கூட்டுத்தாபனத்திடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்ளும்படி அல்லது கொள்வனவு செய்யும்படி அத்தகைய பாவனையாளருக்கு அதிகாரமளிக்கலாம்.

அனுமதிப்பத்திரங்கள் முதலியவற்றை விற்பனை செய்தலையும் கைமாற்றுதலையும் தடைசெய்தல்.

8. அங்கீகரிக்கப்பட்ட பெற்ரோல் பாவனையாளர் எவரும்—

(அ) அந்தப் பாவனையாளருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப் பத்திரத்தை அல்லது அத்தகைய ஏதேனும் அனுமதிப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஏதேனும் கூப்பனை வேறு எவரேனும் ஆளுக்கு விற்பனைசெய்தல் அல்லது கைமாற்றுதல் ஆகாது; அல்லது

(ஆ) அந்தப் பாவனையாளரின் பயன்பாட்டிற்காகப் பெற்ரோலைக் கொள்வனவு செய்ய அல்லது பெற்றுக்கொள்ள வேறு எவரேனும் ஆளை இயலச்செய்யும் நோக்கத்துக்காகத் தவிர அந்த ஆளிடம் அத்தகைய அனுமதிப்பத்திரத்தை அல்லது கூப்பனை ஒப்படைத்தல் ஆகாது; அல்லது

(இ) கூப்பன் எதையும் எந்த அனுமதிப் பத்திரத்துடன் அது இணைக்கப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப் பத்திரத்தின் நியதிகளுக்கு இணங்க ஒரு விற்பனையாளரிடமிருந்து அல்லது கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்ரோலைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காகத் தவிர, விற்பனையாளரிடம் அல்லது கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைத்தல் ஆகாது; அல்லது

(ஈ) அந்தப் பாவனையாளருக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றின் அதிகாரத்தின்கீழ் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட பெற்ரோலை வேறு எவரேனும் ஆளுக்கு விற்பனைசெய்தல் அல்லது விநியோகித்தல் ஆகாது.

**பெற்ரோல் பாவனையாளர் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டமையை இல்லாதாக்கல்.**

9. (1) எவரேனும் ஆள் பெற்ரோல் பாவனையாளர் ஒருவராக இச்சட்டத்தின்கீழ் அங்கிகரிக்கப்பட்டுள்ளவிடத்து, அல்லது அங்கிகரிக்கப்பட்டுள்ளவராகக் கருதப்படுகின்றவிடத்து, அதிகாரி—

(அ) அத்தகைய ஆள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் மீறியுள்ளார் என, அல்லது இச்சட்டத்தின்கீழ் அதிகாரியினால் வழங்கப்பட்ட அல்லது விடுக்கப்பட்ட எவையேனும் பணிப்புக்களுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளார் என, அல்லது அதன் கீழ்ச் செய்யப்பட்ட அல்லது கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தில் அல்லது விபரத்திரட்டில் பொய்யான கூற்றொன்றை, அது பொய்யானதென அறிந்துகொண்டே செய்துள்ளார் எனத் திருப்தியடைவாரெனில், அல்லது

(ஆ) (i) இலங்கையில் அப்போதைக்குக் கிடைக்கத்தக்கதாகவிருக்கும் பெற்ரோலின் கையிருப்புக்களையும்;

(ii) அத்தகைய கையிருப்புக்களைப் பகிரங்க நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கெனவும் அத்தியாவசியமான சேவைகளைப் பேணுவதற்கெனவும் பேணிக் காப்பதற்கான அவசியத்தையும்;

(iii) அந்த ஆளுக்கு எந்நோக்கங்களுக்காகப் பெற்ரோல் தேவைப்படுகின்றதோ அந்த நோக்கங்களையும்,

கவனத்திற்கொண்டு பாக்கும்போது, அத்தகைய ஆளுக்குப் பெற்ரோல் வழங்கல்களைப் பெற்றுக்கொள்ள அதிகாரமளிக்கப்படுதல் ஆகாது எனத் திருப்தியடைவாரெனில், அதிகாரி அத்தகைய அங்கீகாரத்தை இல்லாதாக்கலாம்.

(2) பெற்ரோல் பாவனையாளர் ஒருவராக எவரேனும் ஆளுக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரம் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதிகாரியினால் இல்லாதாக்கப்படுகின்றவிடத்து—

(அ) பாவனையாளர் ஒருவராக அங்கீகரிக்கப்படுவதற்கெனச் செய்யப்பட்ட அவரது விண்ணப்பத்தில் அவரால் குறித்துரைக்கப்பட்ட முகவரிக்கு அல்லது மோட்டார் வாகனம் ஒன்றின் பதிவுபெற்ற சொந்தக்காரராக இருப்பதன் பயனாகப் பெற்ரோல் பாவனையாளர் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டுள்ளவராகக் கருதப்பட்ட ஆளொருவரின் விடயத்தில், மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் அந்த வாகனம் தொடர்பில் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட முகவரிக்குப் பதிவஞ்சலில் அனுப்பப்பட்ட கடிதம் மூலம், அதிகாரி, அத்தகைய இல்லாதாக்குகை பற்றிய அறிவித்தலை அந்த ஆளுக்குக் கொடுத்தல் வேண்டும்;

(ஆ) அந்த ஆள், அறிவித்தல் அவருக்குக் கிடைத்த தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள்ளும், ஐந்து ரூபாக்கொண்ட கட்டணம் ஒன்றைச் செலுத்தியதன்மேலும் அத்தகைய இல்லாதாக்குகைக்கு எதிராக அமைச்சரினது அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையீடு ஒன்றைச் செய்யலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மீது செயலாளரின் முடிவு இறுதியானதாகவிருத்தல் வேண்டும்.

(4) பெற்ரோல் பாவனையாளர் ஒருவராக எவரேனும் ஆளுக்கு அளிக்கப்பட்ட அங்கிகாரம் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரியினால் இல்லாதாக்கப்படுகின்றவிடத்து, அல்லது எவரேனும் ஆள் அங்கீகரிக்கப்பட்ட பெற்ரோல் பாவனையாளர் ஒருவராக இல்லாதொழிகின்றவிடத்து, அத்தகைய ஆள், 7 ஆம் பிரிவின்கீழ் அதிகாரியினால் அவருக்கு வழங்கப்பட்ட ஒவ்வோர் அனுமதிப்பத்திரத்தையும் அதிகாரியிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

பெற்ரோலியப் பொருளின் விற்பனை அல்லது விநியோகம் பற்றிய ஏற்பாடு.

10. (1) இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்தும், அதன் பின்னரும்.—

(அ) ஆள் எவரும் ஏதேனும் அளவினதான பெற்ரோலை வேறு எவரேனும் ஆளுக்கு விற்பனை செய்தலானது அல்லது விநியோகித்தலானது சில்லறை விற்பனவு நிலையம் ஒன்றில் ,அல்லது கூட்டுத்தாபனத்தில் நடைபெறுவதுடன் அந்த வேறு ஆளினால் செல்லுபடியான அனுமதிப் பத்திரமொன்று அந்த விற்பனவு நிலையம் தொடர்பிலான விற்பனையாளருக்கு, அல்லது கூட்டுத்தாபனத்தின் முகவர் அல்லது சேவையாளர் ஒருவருக்குக் காண்பிக்கப்பட்டால் ஒழியவும், அத்துடன்

(ஆ) அந்தப் பெற்ரோலியப் பொருளின் அந்த அளவைக் குறிக்கும் செல்லுபடியான கூப்பன் ஒன்று அல்லது செல்லுபடியான கூப்பன்கள் அந்த விற்பனையாளரால் அல்லது அந்த முகவரால் அல்லது சேவையாளரால் அந்த அனுமதிப்பத்திரத்திலிருந்து கிழித்தெடுக்கப்பட்டால் ஒழியவும்,

அத்தகைய ஆள் அத்தகைய அளவினதான பெற்ரோலை அத்தகைய வேறு எவரேனும் ஆளுக்கு விற்பனை செய்தல் அல்லது விநியோகித்தல் ஆகாது.

இவ்வுட்பிரிவில் உள்ள எதுவும், கூட்டுத்தாபனத்தினால் அல்லது கூட்டுத்தாபனத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவரினால் விற்பனையாளர் ஒருவருக்குப் பெற்ரோல் விற்கப்படுவதற்கு அல்லது பெற்ரோல் விநியோகிக்கப்படுவதற்கு ஏற்புடையதாதல் ஆகாது.

(2) எவரேனும் ஆள் (அவர் இவ்வுட்பிரிவில் "வாங்குநர்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவார்) சில்லறை விற்பனவு நிலையமொன்றில் வேலைசெய்யும் ஆளொருவருக்கு, பெற்ரோலைக் கொள்வனவு செய்யும்படி அல்லது பெற்றுக் கொள்ளும்படி வாங்குநருக்கு அதிகாரமளிக்கும் அனுமதிப்பத்திரமொன்றைக் காண்பிக்குமிடத்தும், மோட்டார் வாகனம் ஒன்றின் நோக்கங்களுக்காகப் பெற்ரோலைக் கொள்வனவு செய்யும்படி அல்லது பெற்றுக்கொள்ளும்படி வாங்குநர் அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றார் என்று பயன்படும் பதிவீடொன்றை அத்தகைய அனுமதிப்பத்திரம் கொண்டிருக்குமிடத்தும், அப்போது, அத்தகைய சில்லறை விற்பனவு நிலையத்தில் வேலைசெய்யும் அத்தகைய ஆள்—

(அ) இவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள விடயத்தில் தவிர, அத்தகைய பெற்ரோலை வாகனம் ஒன்றின் தாங்கிக்குள் விடுவதன் மூலமாகவல்லாது வேறுவகையாக வாங்குநருக்கு விநியோகித்தல் ஆகாது ;

(ஆ) வாகனமொன்றின் தாங்கிக்குள் விடுவதன் மூலமாகவல்லாது வேறுவகையில் அத்தகைய பெற்றோல் விநியோகிக்கப்பட வேண்டுமென வாங்குநர் தேவைப்படுத்துவாராயின், வாங்குந ரால் காண்பிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம், அவரால் தேவைப் படுத்தப்பட்ட அத்தகைய முறையில் பெற்றோல் விநியோகிக்கப் படுவதற்கு அதிகாரமளித்தால், அந்த முறையில் பெற்றோலை விநியோகித்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) இவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட் டுள்ள விடயத்தில் தவிர, வாங்குநர் எந்த வாகனம் தொடர்பில் பெற்றோலைக் கொள்வனவு செய்ய அல்லது பெற்றுக்கொள்ள அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றாரோ அந்த வாகனத்தின் இலக் கம் என வாங்குநரால் காண்பிக்கப்பட்ட அனுமதிப் பத்திரத் தில் குறித்துரைக்கப்பட்ட அதே இலக்கத்தை, மோட்டார் வாக னச் சட்டத்தின்கீழ் வாகனம் பதிவு செய்யப்பட்டதன்மேல் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட (இச் சட்டத்தில் சிலவேளை களில் "பதிவு செய்யப்பட்ட இலக்கம்" எனக் குறிப்பீடுசெய் யப்படும்) இனங்காட்டும் இலக்கமாகக் கொண்டிருக்கும் வாக னத்தின் தாங்கியினுள் அத்தகைய பெற்றோலை வார்ப்பதன் மூலம் அல்லது நிரப்புவதன் மூலம் வாங்குநருக்குப் பெற்றோலை விநியோகித்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், இந்த ஏற்பாடுகளின்மூலம் விதித்துரைக்கப் பட்ட முறையிலல்லாது வேறு எம்முறையிலும் பெற்றோல் விநியோகிக் கப்படும்படி அனுமதிப்பத்திரம் அதிகாரமளிக்குமெனின், அந்த முறையில் பெற்றோல் விநியோகித்தலை இவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற் பாடுகளில் உள்ள எதுவும் தடைசெய்வதாகக் கருதப்படுதல் ஆகாது.

(3) ஏதேனும் சில்லறை விற்பனவு நிலையத்தில் எந்நேரத்திலாயினும், அந்த விற்பனவு நிலையம் தொடர்பில் அந்நேரத்தில் விற்பனையாளராக இராத வேறு ஆள் எவரும், இந்தப் பிரிவின் முற்போந்த ஏற் பாடுகளுள் எவற்றுக்கும் முரணாக வேறு எவரேனும் ஆளுக்கு ஏதேனும் பெற்றோலை விற்பனை செய்யுமிடத்து அல்லது விநியோகிக்குமிடத்து, அந்த விற்பனையாளரும் அத்தகைய மீறுகையினால் ஏற்படுத்தப்பட்ட தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், வேறு எவரேனும் ஆளுக்குப் பெற்றோல் விற்கப்படும் அல்லது விநியோகிக்கப்படும் விடயத்தில் அல்லது வேறு எவரேனும் ஆளுக்குச் சொந்தமான ஏதேனும் வாகனத்தின் தாங்கி யினுள் வார்ப்பதன்மூலம் அல்லது நிரப்புவதன்மூலம் பெற்றோல் விற்கப் படும் அல்லது விநியோகிக்கப்படும் விடயத்தில் ஏற்புடையனவாகின்ற அதேமுறையில், சில்லறை விற்பனவு நிலையம் ஒன்றில் அந்த விற்பனவு நிலையம் தொடர்பிலான விற்பனையாளருக்கு பெற்றோல் விற்கப்படும் அல் லது விநியோகிக்கப்படும் விடயத்திலும், அல்லது அந்த விற்பனையாளருக் குச் சொந்தமான ஏதேனும் வாகனத்தின் தாங்கியினுள் வார்ப்பதன்மூலம் அல்லது நிரப்புவதன்மூலம் பெற்றோல் விற்கப்படும் அல்லது விநியோகிக் கப்படும் விடயத்திலும் இந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

சில்லறை விற்பனவு நிலையங்களில் கையிருப்புக்கள் குறைவாக இருத்தல் அல்லது மேலதிகமாக இருத்தல்.

**11.** (1) இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும்—

(அ) (இவ்வுட்பிரிவில் " இயைபான தேதி " எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏதேனும் தேதியன்று சில்லறை விற்பனவு நிலையம் ஒன்றில் கையிருப்பில் உள்ள பெற்றோலின் அளவினது கூட்டுமொத்தமும் ; அத்துடன்

(ஆ) அந்த விற்பனவு நிலையத்தில் உள்ள பெற்றோலின் கையிருப்புக்களை அதிகாரி கடைசியாக நிச்சயித்த தேதிக்கும் இயைபான தேதிக்கும் இடையில் அந்த விற்பனவு நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனவான அதிகாரியினால் வழங்கப்பட்ட கூப்பன்கள் பிரதிபலிக்கும் பெற்றோலின் அளவினது கூட்டுமொத்தமும்—

(i) அந்த விற்பனவு நிலையத்தில் உள்ள பெற்றோலின் கையிருப்புக்கள் அதிகாரியினால் கடைசியாக நிச்சயிக்கப்பட்ட தேதியன்று அந்த விற்பனவு நிலையத்தில் கையிருப்பில் உள்ள பெற்றோலின் அளவினதும் ; அத்துடன்

(ii) சில்லறை விற்பனவு நிலையமொன்றில் உள்ள பெற்றோலின் கையிருப்புக்களை அதிகாரி கடைசியாக நிச்சயித்த தேதிக்கும் இயைபான தேதிக்கும் இடையில், கூட்டுத்தாபனத்தினால் அல்லது கூட்டுத்தாபனத்தின் அதிகாரம்பெற்ற விற்பனையாளரினால் அந்த விற்பனவு நிலையத்திற்கு விநியோகிக்கப்பட்ட பெற்றோல் எதுவுமிருப்பின், அந்தப் பெற்றோலின் அளவினதும்,

கூட்டுமொத்தத்திலும் பார்க்கக் குறைவானதாகவிருக்கின்றவிடத்து, 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கு முரணாக அந்த விற்பனவு நிலையத்தில் பெற்றோல் விற்கப்பட்டுள்ளதாக ஊகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்த விற்பனவு நிலையம் தொடர்பிலான விற்பனையாளர், ஏதேனும் தவிர்க்கொணாக் காரணத்தினால் பெற்றோலின் கையிருப்புக்கள் குறைவாக இருந்தனவென நீதிமன்றம் திருப்திப்படும்வகையில் எண்பித்தாலொழிய, அத்தகைய மீறுகையினால் ஏற்பட்ட தவறுக்கு அவர் குற்றவாளியாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும்—

(அ) (இவ்வுட்பிரிவில் " இயைபான தேதி " எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏதேனும் தேதியன்று சில்லறை விற்பனவு நிலையம் ஒன்றில் கையிருப்பில் உள்ள பெற்றோலின் அளவினது கூட்டுமொத்தமும் ; அத்துடன்

(ஆ) அந்த விற்பனவு நிலையத்தில் உள்ள பெற்றோலின் கையிருப்புக்களை அதிகாரி கடைசியாக நிச்சயித்த தேதிக்கும் இயைபான தேதிக்கும் இடையில் அந்த விற்பனவு நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனவான அதிகாரியினால் வழங்கப்பட்ட கூப்பன்கள் பிரதிபலிக்கும் பெற்றோலின் அளவினது கூட்டுமொத்தமும்—

(i) அந்த விற்பனவு நிலையத்தில் உள்ள பெற்றோலின் கையிருப்புக்கள், அதிகாரியினால் கடைசியாக நிச்சயிக்கப்பட்ட தேதியன்று அந்த விற்பனவு நிலையத்தில் கையிருப்பில் உள்ள பெற்றோலின் அளவினதும் ; அத்துடன்

(ii) சில்லறை விற்பனவு நிலையமொன்றில் உள்ள பெற்ரோலின் கையிருப்புக்கள், அதிகாரி கடைசியாக நிச்சயித்த தேதிக்கும் இயைபான தேதிக்கும் இடையில், கூட்டுத் தாபனத்தினால் அல்லது கூட்டுத்தாபனத்தின் அதிகாரம் பெற்ற விற்பனையாளரினால் அந்த விற்பனவு நிலையத்திற்கு விநியோகிக்கப்பட்ட பெற்ரோல் எதுவுமிருப்பின், அந்தப் பெற்ரோலின் அளவினதும்,

கூட்டுமொத்தத்திலும் பார்க்கக் கூடுதலானதாகவிருக்கின்றவிடத்து, அந்த விற்பனவு நிலையம் தொடர்பிலான விற்பனையாளர், ஏதேனும் தவிர்க்கொணாக் காரணத்தினால் பெற்ரோலின் கையிருப்புக்கள் கூடுதலாக இருந்தனவென அல்லது அவை சட்டமுறையான வழிகளில் பெறப்பட்டவையென நீதிமன்றம் திருப்திப்படும் வகையில் எண்பித்தாலொழிய, அத்தகைய மீறுகையினால் ஏற்பட்ட தவறுக்கு அவர் குற்றவாளியாதல் வேண்டும்.

**பெற்ரோலின் விற்பனையின் மீது விற்பனையாளருக்குள்ள கடமைகள்.**

12. இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும், அதன் பின்னரும், பெற்ரோலை விற்றதன்மேல் அல்லது விநியோகித்ததன்மேல் விற்பனையாளர் ஒவ்வொருவரும், காலத்திற்குக்காலம், அதிகாரியினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்களுக்கு இணங்க, அந்தப் பணிப்புக்களில் அதிகாரி குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய அலுவலருக்கு அல்லது கூட்டுத்தாபனத்திற்கு, 10 ஆம் பிரிவின்கீழ் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட எல்லாக் கூப்பன்களையும் கொடுத்தல் வேண்டும்.

**விற்பனையாளர்கள் அல்லாத ஆட்களினால் கொடுக்கப்படும் விபரத் திரட்டுக்கள்.**

13. இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், விற்பனையாளர் ஒருவராக அல்லது கூட்டுத்தாபனமாக இராதவரும், அத்தேதியன்று ஒரு வாகனத்தின், கலத்தின் அல்லது வானூர்தியின் தாங்கிக்குள் அல்லாது வேறுவகையில் பத்து கலன்களுக்கு மேற்பட்ட ஏதேனும் அளவினதான பெற்ரோலை தமது உடைமையில் வைத்திருப்பவருமான ஒவ்வோர் ஆளும், அத்தேதியிலிருந்து இரண்டு வாரக் காலப்பகுதி முடிவுறுமுன்னர், தமது உடைமையில் இருக்கும் பெற்ரோலின் அளவைக் குறித்துரைக்கும் விபரத்திரட்டொன்றை அதிகாரிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்; அத்துடன் அந்த ஆள் இச்சட்டத்தின்கீழ் பெற்ரோல் பாவனையாளர் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டிருப்பினும் அல்லது அங்கீகரிக்கப்பட்டவராகக் கருதப்படினும், அதிகாரியின் அபிப்பிராயப்படி அந்த ஆளுக்கு எந்த நோக்கங்களுக்கு பெற்ரோல் தேவைப்படுகின்றதோ அந்த நோக்கங்களுக்கு அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட அளவு எந்தக் காலப்பகுதியின்போது போதுமானதாகவிருக்குமோ அந்தக் காலப்பகுதி தொடர்பில் அதிகாரி அவருக்கு அனுமதிப்பத்திரம் எதனையும் வழங்க மறுக்கலாம்.

கூட்டுத்தாபனத்தினால் பெற்றோலியப் பொருட்கள் விற்பனை செய்யப்படுதல் முதலியனவற்றின் மீதான மட்டுப்பாடுகள்.

14. இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும்—

(1) எவரேனும் விற்பனையாளருக்கு விற்கப்படக்கூடிய அல்லது விநியோகிக்கப்படக்கூடிய பெற்றோலின் அளவு பற்றியும் அவ்வாறு விநியோகிக்கப்படவேண்டிய நேரம் பற்றியும் அதிகாரி காலத்திற்குக் காலம் வழங்கக்கூடிய அத்தகைய பணிப்புக்களுக்கு இணங்கவல்லாது, கூட்டுத்தாபனமானது அத்தகைய பெற்றோலை அத்தகைய எவரேனும் விற்பனையாளருக்கு விற்பனைசெய்தல் அல்லது விநியோகித்தல் ஆகாது ;

(2) விற்பனையாளர் ஒருவர் அல்லாத எவரேனும் ஆள் கூட்டுத்தாபனத்திடமிருந்து நேரடியாக ஏதேனும் அளவினதான பெற்றோலைக் கொள்வனவு செய்யும்படி அல்லது பெற்றுக்கொள்ளும்படி அதிகாரமளிக்கின்ற பதிவிடொன்றைக் கொண்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரம் ஒன்றை அந்த ஆள் அல்லது அவர் சார்பில் வேறோர் ஆள் காண்பிப்பதன்மீதன்றி, அத்தகைய ஆளுக்கு அத்தகைய ஏதேனும் அளவினதான பெற்றோலைக் கூட்டுத்தாபனம் விற்பனை செய்தல் அல்லது விநியோகித்தல் ஆகாது.

உடைமையில் வைத்திருத்தலை மட்டுப்படுத்தல், தேடுவதற்கான தத்துவங்கள், முதலியன.

15. (1) இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், கூட்டுத்தாபனம் அல்லாத அல்லது விற்பனையாளர் ஒருவர் அல்லாத ஆள் எவரும்—

(அ) அத்தகைய ஆள் அங்கீகரிக்கப்பட்ட பெற்றோல் பாவனையாளர் ஒருவராகவிருப்பின், இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றின் அதிகாரத்தின்கீழ் கொள்வனவு செய்ய அல்லது பெற்றுக்கொள்ள அவருக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்ற அளவிற்கு மேற்பட்ட ஏதேனும் அளவினதான பெற்றோலை, அத்தகைய அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கின்ற காலப் பகுதியின்போது தமது கையிருப்பில் அல்லது உடைமையில் வைத்திருத்தல் ஆகாது ; அல்லது

(ஆ) அத்தகைய ஆள் அங்கீகரிக்கப்பட்ட பெற்றோல் பாவனையாளர் ஒருவராக இல்லாதிருப்பின், எந்த அளவினதான பெற்றோலைத் தானும் தமது கையிருப்பில் அல்லது உடைமையில் வைத்திருத்தல் ஆகாது.

(2) (அ) பெற்றோல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படுகின்ற ஏதேனும் வளவில், வாகனத்தில், கலத்தில், அல்லது வானூர்தியில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள பெற்றோலின் அளவை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக அதனுள் நுழைந்து தேடுதலும் ;

(ஆ) ஏதேனும் சில்லறை விற்பனவு நிலையத்திலுள்ள ஏதேனும் அளவிடும் கருவி பொய்யானதா என நிச்சயிக்கும் நோக்கத்துக்காக அதனைச் சோதனையிடுதலும், பரீட்சித்தலும்,

எவரேனும் அதிகாரம் பெற்ற அலுவலருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

## பாகம் III

### மண்ணெண்ணெய் விற்பனை முதலியவற்றின்மீதான மட்டுப்பாடு

மண்ணெண்ணெய்யைக் கொள்வனவு செய்வதன் மீதான மட்டுப்பாடு.

**16.** இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும், அதன்பின்னரும் விற்பனையாளர் ஒருவர் அல்லாத ஆள் எவரும், அவர், அங்கீகரிக்கப்பட்ட மண்ணெண்ணெய்ப் பாவனையாளர் ஒருவராகவும் மண்ணெண்ணெய் தொடர்பில் அதிகாரியினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரம் ஒன்றை வைத்திருப்பவராகவும் இருந்தாலன்றி, மண்ணெண்ணெய்யைக் கொள்வனவுசெய்தல் அல்லது பெற்றுக்கொள்ளுதல் ஆகாது.

குறித்த சில ஆட்கள் மண்ணெண்ணெய்ப் பாவனையாளர்களாக, அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றனர் எனக் கருதப்படல்.

17. (1) குடியிருப்பாளர் நிரலில் பெயர் பதியப்பட்டிருக்கின்றவரும், அதன்கண் பிரதான குடியிருப்பாளர் எனப் பெயர்குறிக்கப்பட்டிருக்கின்றவருமான ஒவ்வோர் ஆளும், அத்தகைய ஆள் அவ்வாறு பெயர்குறிக்கப்பட்டிருக்கின்ற வரையில், அவ்வாறு பெயர்குறிக்கப்பட்டிருக்கின்றவரையில் மட்டுமே, இச்சட்டத்தின்கீழ் மண்ணெண்ணெய்ப் பாவனையாளர் ஒருவராக அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றார் எனக் கருதப்படல் வேண்டும்.

இப்பிரிவில் "குடியிருப்பாளர் நிரல்" என்பது உணவுக் கட்டுப்பாட்டாளரால் நிருவகிக்கப்படும் பங்கீட்டு முறைமையின் நோக்கங்களுக்காக அவரால் தயாரிக்கப்பட்டுப் பேணிவரப்படும் நிரல் எனப் பொருளாகும்.

(2) ஓராம் உட்பிரிவின் பயனாக மண்ணெண்ணெய்ப் பாவனையாளர் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டவரெனக் கருதப்பட்ட எவரேனும் ஆள் ஏதேனும் காலப்பகுதியின்போது பெற்றுக்கொள்ள அதிகாரமளிக்கப்பட வேண்டிய மண்ணெண்ணெய்யின் அளவை அதிகாரி தீர்மானிப்பதற்கு இயலச்செய்யும் வகையில் அதிகாரி தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவலைக் கொடுத்துதவும்படி அதிகாரி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் பயனாக இச்சட்டத்தின்கீழ் மண்ணெண்ணெய்ப் பாவனையாளர் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற எவரேனும் ஆள் மண்ணெண்ணெய்ப் பாவனையாளர் ஒருவராக அங்கீகாரம் பெறுவதற்கு இச்சட்டத்தின்கீழ் விண்ணப்பித்தல் வேண்டும் எனத் தேவைப்படுத்துவதாக இச்சட்டத்தில் உள்ள எதுவும் வாசிக்கப்படுதலோ அல்லது பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது.

II ஆம் பாகத்தின் குறித்த சில ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல்.

18. பிரிவுகள் 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15 ஆகியவற்றின் ஏற்பாடுகள், மண்ணெண்ணெய்ப் பாவனையாளர்களாக அங்கீகாரம் பெறுவதற்கான விண்ணப்பங்கள், ஆளொருவரை மண்ணெண்ணெய்ப் பாவனையாளர் ஒருவராக அங்கீகரிக்க மறுப்பதற்கு அதிகாரிக்குள்ள தத்துவம், அங்கீகரிக்கப்பட்ட மண்ணெண்ணெய்ப் பாவனையாளர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல், அங்கீகரிக்கப்பட்ட மண்ணெண்ணெய்ப் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை விற்பனை செய்தலையும் கைமாற்றலையும் தடைசெய்தல், மண்ணெண்ணெய் பாவனையாளர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரத்தை இல்லாதாக்குதல்,

மண்ணெண்ணெய்யை விற்பனை செய்தலும் விநியோகித்தலும், சில்லறை விற்பனவு நிலையங்களிலுள்ள மண்ணெண்ணெய்க் கையிருப்புக்கள் குறைவாகவிருத்தல் அல்லது மேலதிகமாகவிருத்தல், மண்ணெண்ணெய் விற்பனையின்மீது விற்பனையாளர்களுக்குள்ள கடமைகள் மண்ணெண்ணெய்யை உடைமையில் வைத்திருக்கின்ற ஆட்களினால் கொடுத்துதவப்படவேண்டிய விபரத் திரட்டுக்கள், கூட்டுத்தாபனத்தினால் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படுவதன் மீதான மட்டுப்பாடு, மண்ணெண்ணெய்யை உடைமையில் வைத்திருப்பதன் மீதான மட்டுப்பாடு, மண்ணெண்ணெய் தொடர்பில் தேடுகையிடுவதற்கான தத்துவங்கள் ஆகியவற்றுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IV

### தன்னியக்கத் டீசல் எண்ணெய் விற்பனைகள் முதலியவற்றின் மீதான மட்டுப்பாடு

*தன்னியக்கத் டீசல் எண்ணெய்*

19. இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், விற்பனையாளர் ஒருவரல்லாத ஆள் எவரும், அவர் அங்கீகரிக்கப்பட்ட தன்னியக்கத் டீசல் எண்ணெய்ப் பாவனையாளர் ஒருவராகவும் தன்னியக்கத் டீசல் எண்ணெய் தொடர்பில் அதிகாரியினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரம் ஒன்றை வைத்திருப்பவராகவும் இருந்தாலன்றி, தன்னியக்கத் டீசல் எண்ணெய்யைக் கொள்வனவு செய்தல் அல்லது பெற்றுக்கொள்ளுதல் ஆகாது.

*குறித்த சில ஆட்கள் தன்னியக்கத் டீசல் எண்ணெய்ப் பாவனையாளர்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றனர் எனக் கருதப்படல்.*

20. (1) மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் டீசல் எண்ணெய்யினால் செலுத்தப்படும் மோட்டார் வாகனம் ஒன்றின் சொந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றவரும், அவ்வாகனம் தொடர்பில், அச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட—

(அ) பதிவுச் சான்றிதழொன்றையும்;

(ஆ) செல்லுபடியான அரசிறை உரிமமொன்றையும்; அத்துடன்

(இ) செல்லுபடியான காப்புறுதிச் சான்றிதழொன்றையும்;

வைத்திருக்கின்றவருமான ஒவ்வோர் ஆளும், அவர், அவ்வாறு பதிவு செய்யப்பட்டவராகத் தொடர்ந்திருக்கும் வரையில், அவ்வாறு தொடர்ந்திருக்கும் வரையில் மட்டுமே, இச்சட்டத்தின்கீழ் தன்னியக்கத் டீசல் எண்ணெய்ப் பாவனையாளர் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றார் எனக் கருதப்படல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் பயனுக இச்சட்டத்தின்கீழ்த் தன்னியக்கத் டீசல் எண்ணெய்ப் பாவனையாளர் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற எவரேனும் ஆள் ஏதேனும் காலப்பகுதியின்போது பெற்றுக்கொள்ளும்படி அதிகாரமளிக்கப்படவேண்டிய தன்னியக்கத் டீசல் எண்ணெய்யின் அளவை அதிகாரி நிர்மானிப்பதற்கு இயலச்செய்யும் வகையில் அதிகாரி தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவலைக் கொடுத்துதவும்படி அதிகாரி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் பயனாக தன்னியக்கத் டீசல் எண்ணெய்ப் பாவனையாளர் ஒருவராகக் கருதப்படுகின்ற எவரேனும் ஆளை, இச்சட்டத்தின் கீழ்த் தன்னியக்கத் டீசல் எண்ணெய்ப் பாவனையாளர் ஒருவராக அங்கிகாரம் பெறுவதற்கு விண்ணப்பிக்கும்படி இச்சட்டத்தில் உள்ள எதுவும் தேவைப்படுத்துவதாக வாசிக்கப்படுதலோ அல்லது பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது.

*II ஆம் பாகத்தின் குறித்த சில ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல்.*

21. பிரிவுகள் 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15 ஆகியவற்றின் ஏற்பாடுகள் தன்னியக்கத் டீசல் எண்ணெய்ப் பாவனையாளர்களாக அங்கிகாரம் பெறுவதற்கான விண்ணப்பங்கள், ஆளொருவரை தன்னியக்கத் டீசல் எண்ணெய்ப் பாவனையாளர் ஒருவராக அங்கிகரிக்க மறுப்பதற்கு அதிகாரிக்குள்ள தத்துவம், அங்கிகரிக்கப்பட்ட தன்னியக்கத் டீசல் எண்ணெய்ப் பாவனையாளர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல், அங்கிகரிக்கப்பட்ட தன்னியக்கத் டீசல் எண்ணெய்ப் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களை விற்பனைசெய்தலையும் கைமாற்றுதலையும் தடைசெய்தல், தன்னியக்கத் டீசல் எண்ணெய்ப் பாவனையாளர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட அங்கிகாரத்தை இல்லாதாக்குதல், தன்னியக்கத் டீசல் எண்ணெய்யை விற்பனைசெய்தலும் விநியோகித்தலும், சில்லறை விற்பனவு நிலையங்களிலுள்ள தன்னியக்க டீசல் எண்ணெய்க் கையிருப்புக்கள் குறைவாகவிருத்தல் அல்லது மேலதிகமாகவிருத்தல், தன்னியக்கத் டீசல் எண்ணெய்யை விற்பனை செய்வதன்மீது விற்பனையாளர்களுக்குள்ள கடமைகள், தன்னியக்கத் டீசல் எண்ணெய்யை உடைமையில் வைத்திருக்கும் ஆட்களினால் கொடுத்துவப்படவேண்டிய விபரத்திரட்டுக்கள், கூட்டுத்தாபனத்தினால் தன்னியக்கத் டீசல் எண்ணெய் விற்பனைசெய்யப்படுவதன்மீதான மட்டுப்பாடு, தன்னியக்கத் டீசல் எண்ணெய்யை உடைமையில் வைத்திருப்பதன் மீதான மட்டுப்பாடு ஆகியவற்றுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் V

## பாரத் டீசல் எண்ணெய்யின் விற்பனைகள் முதலியவற்றின் மீதான மட்டுப்பாடு

*பாரத் டீசல் எண்ணெயைக் கொள்வனவு செய்வதன் மீதான மட்டுப்பாடு.*

22. இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், விற்பனையாளர் ஒருவரல்லாத ஆளெவரும், பாரத் டீசல் எண்ணெய்யின் அங்கீகரிக்கப்பட்ட பாவனையாளராகவும், பாரத் டீசல் எண்ணெய் தொடர்பில் அதிகாரியினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரமொன்றை உடையவராகவும் இருந்தால் ஒழிய, ஏதேனும் பாரத் டீசல் எண்ணெய்யைக் கொள்வனவு செய்தலாகாது.

*II ஆம் பாகத்தின் குறித்த சில ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல்.*

23. பிரிவுகள் 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15 ஆகியவற்றின் ஏற்பாடுகள், பாரத் டீசல் எண்ணெய்ப் பாவனையாளர்களாக அங்கிகாரம் பெறுவதற்கான விண்ணப்பங்கள், ஆளொருவரை பாரத் டீசல் எண்ணெய்ப் பாவனையாளராக அங்கீகரிக்க மறுப்பதற்கு அதிகாரிக்குள்ள தத்துவம், அங்கீகரிக்கப்பட்ட பாரத் டீசல் எண்ணெய்ப் பாவனையாளர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல், பாரத் டீசல் எண்ணெய்ப் பாவனையாளர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரத்தை இல்லாததாக்குதல், அங்கீகரிக்கப்பட்ட பாரத் டீசல் எண்ணெய்ப் பாவனையாளர்களுக்கு

வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை விற்பனை செய்தலையும் கைமாற்று தலையும் தடைசெய்தல், பாரத் தீசல் எண்ணெய்யை விற்பனைசெய்தலும் விநியோகித்தலும், சில்லறை விற்பனவு நிலையங்களிலுள்ள பாரத் தீசல் எண்ணெய்க் கையிருப்புக்கள் குறைவாக இருத்தல் அல்லது மேலதிகமாக இருத்தல், பாரத் தீசல் எண்ணெய்யின் விற்பனையின்மீது விற்பனையாளர்களுக்குள்ள கடமைகள், பாரத் தீசல் எண்ணெய்யை உடைமையில் வைத்திருக்கின்ற ஆட்களினால் கொடுத்துதவப்படவேண்டிய விபரத்திரட்டுக்கள், கூட்டுத்தாபனத்தினால் பாரத் தீசல் எண்ணெய் விற்கப்படுவதன் மீதான மட்டுப்பாடு, பாரத் தீசல் எண்ணெய்யை உடைமையில் வைத்திருப்பதன் மீதான மட்டுப்பாடு ஆகியவற்றுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் VI

### உலை எண்ணெய்யின் விற்பனைகள் முதலியவற்றின் மீதான மட்டுப்பாடு

**உலை எண்ணெய்யைக் கொள்வனவு செய்வதன் மீதான மட்டுப்பாடு.**

24. இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், விற்பனையாளர் ஒருவரல்லாத ஆளெவரும், உலை எண்ணெயின் அங்கிகரிக்கப்பட்ட பாவனையாளராகவும், உலை எண்ணெய் தொடர்பில் அதிகாரியினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரமொன்றை உடையவராகவும் இருந்தால் ஒழிய, எதேனும் உலை எண்ணெய்யைக் கொள்வனவு செய்தலாகாது.

**II ஆம் பாகத்தின் குறித்த சில ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல்.**

25. பிரிவுகள், 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15 ஆகியவற்றின் ஏற்பாடுகள் உலை எண்ணெய்ப் பாவனையாளர்களாக அங்கிகாரம் பெறுவதற்கான விண்ணப்பங்கள், ஆளொருவரை உலை எண்ணெய்ப் பாவனையாளராக அங்கிகரிக்க மறுப்பதற்கு அதிகாரிக்குள்ள தத்துவம் அங்கீகரிக்கப்பட்ட உலை எண்ணெய்ப் பாவனையாளர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல், அங்கீகரிக்கப்பட்ட உலை எண்ணெய்ப் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை விற்பனை செய்தலையும் கைமாற்றுதலையும் தடைசெய்தல், உலை எண்ணெய்ப் பாவனையாளருக்கு அளிக்கப்பட்ட அங்கிகாரத்தை இல்லாதாக்குதல், உலை எண்ணெய்யை விற்பனை செய்தலும் விநியோகித்தலும், சில்லறை விற்பனவு நிலையங்களிலுள்ள உலை எண்ணெய்க் கையிருப்புக்கள் குறைவாக இருத்தல் அல்லது மேலதிகமாக இருத்தல், உலை எண்ணெய்யின் விற்பனையின்மீது விற்பனையாளர்களுக்குள்ள கடமைகள், உலை எண்ணெய்யை உடைமையில் வைத்திருக்கின்ற ஆட்களினால் கொடுத்துதவப்படவேண்டிய விபரத்திரட்டுக்கள், கூட்டுத்தாபனத்தினால் உலை எண்ணெய் விற்கப்படுவதன்மீதான மட்டுப்பாடு, உலை எண்ணெய்யை உடைமையில் வைத்திருத்தல் மீதான மட்டுப்பாடு ஆகியவற்றுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் VII

### திரவப் பெற்றோலிய வாயுவின் விற்பனைகள் முதலியவற்றின்மீதான மட்டுப்பாடு

*திரவப் பெற்றோலிய வாயுவைக் கொள்வனவு செய்வதன் மீதான மட்டுப்பாடு.*

26. இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், விற்பனையாளர் ஒருவரல்லாத ஆள் எவரும், அவர் அங்கீகரிக்கப்பட்ட திரவப் பெற்றோலிய வாயுப் பாவனையாளர் ஒருவராகவும் திரவப் பெற்றோலிய வாயு தொடர்பில் அதிகாரியினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரம் ஒன்றை வைத்திருப்பவராகவும் இருந்தாலன்றி, திரவப் பெற்றோலிய வாயுவைக் கொள்வனவு செய்தல் அல்லது பெற்றுக்கொள்ளுதல் ஆகாது.

*II ஆம் பாகத்தின் குறித்த சில ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல்.*

27. பிரிவுகள் 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15 ஆகியவற்றின் ஏற்பாடுகள், திரவப் பெற்றோலிய வாயுப் பாவனையாளர்களாக அங்கீகாரம் பெறுவதற்கான விண்ணப்பங்கள், ஆளொருவரைத் திரவப் பெற்றோலிய வாயுப் பாவனையாளர் ஒருவராக அங்கீகரிக்க மறுப்பதற்கு அதிகாரிக்குள்ள தத்துவம், அங்கீகரிக்கப்பட்ட திரவப் பெற்றோலிய வாயுப் பாவனையாளர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல், அங்கீகரிக்கப்பட்ட திரவப் பெற்றோலிய வாயுப் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களை விற்பனைசெய்தலையும் கைமாற்றுதலையும் தடை செய்தல், திரவப் பெற்றோலிய வாயுப் பாவனையாளர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரத்தை இல்லாதாக்குதல், திரவப் பெற்றோலிய வாயுவை விற்பனை செய்தலும் விநியோகித்தலும், சில்லறை விற்பனவு நிலையங்களிலுள்ள திரவப் பெற்றோலிய வாயுக் கையிருப்புக்கள் குறைவாகவிருத்தல் அல்லது மேலதிகமாகவிருத்தல், திரவப் பெற்றோலிய வாயுவை விற்பனை செய்வதன்மீது விற்பனையாளர்களுக்குள்ள கடமைகள், திரவப் பெற்றோலிய வாயுவை உடைமையில் வைத்திருக்கும் ஆட்களினால் கொடுத்துதவப்பட வேண்டிய விபரத்திரட்டுக்கள், கூட்டுத்தாபனத்தினால் திரவப் பெற்றோலிய வாயு விற்பனை செய்யப்படுவதன்மீதான மட்டுப்பாடு, திரவப் பெற்றோலிய வாயுவை உடைமையில் வைத்திருப்பதன்மீதான மட்டுப்பாடு ஆகியவற்றுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் VIII

### வானூர்திச் சுழலிக்கான எரிபொருளின் விற்பனைகள் முதலியவற்றின் மீதான மட்டுப்பாடு

*வானூர்திச் சுழலிக்கான எரிபொருளைக் கொள்வனவு செய்வதன் மீதான மட்டுப்பாடு.*

28. இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், விற்பனையாளர் ஒருவரல்லாத ஆள் எவரும், அவர் அங்கீகரிக்கப்பட்ட வானூர்திச் சுழலிக்கான எரிபொருட் பாவனையாளர் ஒருவராகவும் வானூர்திச் சுழலிக்கான எரிபொருள் தொடர்பில் அதிகாரியினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரம் ஒன்றை வைத்திருப்பவராகவும் இருந்தாலன்றி, வானூர்திச் சுழலிக்கான எரிபொருளைக் கொள்வனவு செய்தல் அல்லது பெற்றுக்கொள்ளுதல் ஆகாது.

II ஆம் பா... தின் குறித்த சில ஏற்பாடு கள் ஏற்புடை யனவாதல்.

29. பிரிவுகள் 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15 ஆகியவற்றின் ஏற்பாடுகள், வானூர்திச் சுழலிக்கான எரிபொருள் பாவனையாளர்களாக அங்கிகாரம் பெறுவதற்கான விண்ணப்பங்கள், ஆளொருவரை வானூர்திச் சுழலிக்கான எரிபொருட் பாவனையாளர் ஒருவராக அங்கிகரிக்க மறுப்பதற்கு அதிகாரிக்குள்ள தத்துவம், அங்கிகரிக்கப்பட்ட வானூர்திச் சுழலிக்கான எரிபொருட் பாவனையார்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல், அங்கிகரிக்கப்பட்ட வானூர்திச் சுழலிக்கான எரிபொருட் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களை விற்பனைசெய்தலையும் கைமாற்றுதலையும் தடைசெய்தல், வானூர்திச் சுழலிக்கான எரிபொருட் பாவனையாளர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட அங்கிகாரத்தை இல்லாதாக்குதல், வானூர்திச் சுழலிக்கான எரிபொருளை விற்பனை செய்தலும் விநியோகித்தலும், சில்லறை விற்பனவு நிலையங்களிலுள்ள வானூர்திச் சுழலிக்கான எரிபொருள் கையிருப்புக்கள் குறைவாகவிருத்தல் அல்லது மேலதிகமாகவிருத்தல், வானூர்திச் சுழலிக்கான எரிபொருளை விற்பனைசெய்வதன்மீது விற்பனையாளர்களுக்குள்ள கடமைகள், வானூர்திச் சுழலிக்கான எரிபொருளை உடைமையில் வைத்திருக்கும் ஆட்களினால் கொடுத்துவப்பட வேண்டிய விபரத்திரட்டுக்கள், கூட்டுத்தாபனத்தினால் வானூர்திச் சுழலிக்கான எரிபொருள் விற்பனைசெய்யப்படுவதன்மீதான மட்டுப்பாடு, வானூர்திச் சுழலிக்கான எரிபொருளை உடைமையில் வைத்திருப்பதன் மீதான மட்டுப்பாடு ஆகியவற்றுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IX

### பொது

விற்பனையாளர்களும் வழங்குநர்களும் விபரத் திரட்டுக்கள் முதலியவற்றைக் கொடுத்தல்.

30. (1) விற்பனையாளர் ஒவ்வொருவரும், தனதுடைமையில் உள்ள ஏதேனும் பெற்ரோலியப் பொருளின் அளவு பற்றியும், அங்கிகரிக்கப்பட்ட பாவனையாளர்களுக்கும் வேறு ஆட்களுக்கும் ஏதேனும் பெற்ரோலியப் பொருளை விற்பனைசெய்தல் அல்லது விநியோகித்தல் பற்றியும், அத்தகைய விற்பனை நோக்கத்துக்காக அல்லது விநியோகிப்பு நோக்கத்துக்காக அவரிடம் ஒப்படைக்கப்பட்ட கூப்பன்கள் பற்றியும் அதிகாரி காலத்துக்குக் காலம் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய விபரத்திரட்டுக்களையும் ஏனைய தகவலையும் அதிகாரிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம்—

(அ) இச்சட்டத்தின் இப்பாகம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து இரண்டு வாரங்களைக் கொண்டவொரு காலப்பகுதி முடிவுறுமுன்னர், விற்பனை நோக்கத்துக்காக எந்த விற்பனையாளருக்கு ஏதேனும் பெற்ரோலியப் பொருள் கூட்டுத்தாபனத்தினால் விற்கப்படுகின்றதோ அல்லது விநியோகிக்கப்படுகின்றதோ அந்த விற்பனையாளரின் பெயரையும் அந்தப் பெற்ரோலியப் பொருள் அந்த விற்பனையாளரினால் எந்த நிலையத்தில் விற்கப்படுகின்றதோ அந்த நிலையத்தின் முகவரியையும் தருகின்ற கூற்றொன்றை அதிகாரிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்;

(ஆ) அதன் உடைமையில் உள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள அல்லது இலங்கையை வந்தடையுமென எதிர்பார்க்கப் பட்ட ஏதேனும் பெற்றோலியப் பொருளின் கையிருப்புக்கள் பற்றியும், விற்பனையாளர்களுக்கும் வேறு ஆட்களுக்கும் ஏதே னும் பெற்றோலியப் பொருளை விற்பனைசெய்தமை அல்லது விநி யோகித்தமை பற்றியும் அதிகாரி காலத்துக்குக் காலம் தேவைப் படுத்தக்கூடியவாறான அத்தகைய விபரத்திரட்டுக்களையும் ஏனைய தகவலையும் அதிகாரிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

விற்பனையாளர்களுக்கான வழங்கல்களை ஒழுங்குபடுத்துவதற்கு அதிகாரிக்குள்ள தத்துவம்.

31. அதிகாரி—

(அ) இலங்கையிலுள்ள ஏதேனும் பெற்றோலியப் பொருளின் கையிருப் புக்கள் ;

(ஆ) பகிரங்க நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கும் அத்தியாவ சியமான சேவைகளைப் பேணுவதற்கும் என அத்தகைய கையிருப்புக்களைப் பேணிக்காப்பதற்கான அவசியம் ;

(இ) அந்தப் பெற்றோலியப் பொருள் தொடர்பில் 12 ஆம் பிரிவின்கீழோ அல்லது 18 ஆம் பிரிவுடன் அல்லது 21 ஆம் பிரிவுடன் அல்லது 23 ஆம் பிரிவுடன் அல்லது 25 ஆம் பிரிவுடன் அல்லது 27 ஆம் பிரிவுடன் அல்லது 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 12 ஆம் பிரிவின்கீழோ கொடுக்கப்பட்ட கூப்பன்கள்,—

ஆகியவற்றைக் கவனத்திற்கொண்டு, விற்பனையாளர்களுக்கு வழங்கக் கூடிய அல்லது விநியோகிக்கக்கூடிய அத்தகைய பெற்றோலியப் பொரு ளின் அளவுகள் பற்றியும் அத்தகைய அளவுகள் எந்த நேரங்களில் விநி யோகிக்கப்படலாமோ அந்த நேரங்கள் பற்றியும் கூட்டுத்தாபனத்துக்குப் பணிப்புக்கள் வழங்கலாம்.

போலிபுனையப்பட்ட, செல்லுபடியற்ற அல்லது இல்லாதாக்கப்பட்ட கூப்பன்கள் முதலியவற்றை உடைமையில் வைத்திருத்தல்.

32. (1) ஏதேனும் பெற்றோலியப் பொருளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக, போலிபுனையப்பட்ட ஏதேனும் கூப்பனைத் தனதுடை மையில் வைத்திருக்கின்ற அல்லது போலிபுனையப்பட்ட ஏதேனும் கூப்ப னைக் கொடுக்கின்ற எவரேனுமாள்—

(அ) அதிகாரியினால் வழங்கப்பட்ட, அல்லது அதிகாரியின் சார்பில் செயலாற்றுகின்ற வேறெவரேனும் அலுவலரினால் அல்லது ஆளி னால் வழங்கப்பட்ட, அல்லது அனுமதிப்பத்திரங்கள் அவருக்கு வழமையாக வழங்கப்படும் இடத்தில் அதிகாரியின் சார்பில் செயலாற்றுபவராகக் கொள்ளப்படுபவரும், அதிகாரியின் சார் பில் செயலாற்றுபவரென நியாயமாக நம்பப்படுபவருமான எவ ரேனுமாளினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றுடன் அந்தக் கூப்பன் இணைக்கப்பட்டிருந்ததென ; அல்லது

(ஆ) எந்த வேறு ஆளின் முகவராக அல்லது சேவையாளராக அவர் உள்ளாரோ அந்த வேறு ஆளினால், அந்த வேறு ஆளின் பயன் பாட்டுக்கென ஒரு விற்பனையாளரிடமிருந்து அந்தப் பெற்றோலி யப் பொருளைப் பெற்றுக்கொள்ள அவரை இயலச்செய்யும் நோக்கத்துக்காக அந்தக் கூப்பன் தமக்கு ஒப்படைக்கப்பட்ட தென ; அல்லது

(இ) புரியப்பட்டதாகச் சார்த்தப்பட்ட தவறு புரியப்பட்ட நேரத்தில் தாம் ஒரு விற்பனையாளராக இருந்தாரெனவும், அத்தகைய விற்பனையாளரின் சில்லறை விற்பனவு நிலையத்தில் பெற்றோலியப் பொருளொன்றை வேறோர் ஆளுக்கு விற்றதன்மேல் அல்லது விநியோகித்ததன்மேல் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அல்லது 18 ஆம் பிரிவுடன் அல்லது 21 ஆம் பிரிவுடன் அல்லது 23 ஆம் பிரிவுடன் அல்லது 25 ஆம் பிரிவுடன் அல்லது 27 ஆம் பிரிவுடன் அல்லது 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அந்தக் கூப்பன் ஓர் அனுமதிப் பத்திரத்திலிருந்து தம்மால் கிழித்தெடுக்கப்பட்டதெனவும், அந்தக் கூப்பன் போலிபுனையப்பட்ட கூப்பன் என்று நியாயமாகச் சந்தேகிக்கப்பட்டிருக்க முடியாதெனவும்; அல்லது

(ஈ) புரியப்பட்டதாகச் சார்த்தப்பட்ட தவறு புரியப்பட்ட நேரத்தில் தாம் கூட்டுத்தாபனத்தின் முகவராக அல்லது சேவையாளராக இருந்தாரெனவும்—

(i) 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அல்லது 18 ஆம் பிரிவுடன் அல்லது 21 ஆம் பிரிவுடன் அல்லது 23 ஆம் பிரிவுடன் அல்லது 25 ஆம் பிரிவுடன் அல்லது 27 ஆம் பிரிவுடன் அல்லது 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அந்தக் கூப்பன் ஒரு விற்பனையாளரினுல் தமக்குக் கொடுக்கப்பட்டதெனவும்; அல்லது

(ii) கூட்டுத்தாபனத்திலுள்ள வேறோர் ஆளுக்குப் பெற்றோலியப் பொருளொன்றைத் தாம் விற்றதன்மேல் அல்லது விநியோகித்ததன்மேல் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அல்லது 18 ஆம் பிரிவுடன் அல்லது 21 ஆம் பிரிவுடன் அல்லது 23 ஆம் பிரிவுடன் அல்லது 25 ஆம் பிரிவுடன் அல்லது 27 ஆம் பிரிவுடன் அல்லது 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஓர் அனுமதிப்பத்திரத்திலிருந்து அந்தக் கூப்பன் தம்மால் கிழித்தெடுக்கப்பட்டதெனவும்,

நீதிமன்றம் திருப்திப்படும் வகையில் அவர் எண்பித்தாலொழிய தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) (அ) ஏதேனும் பெற்றோலியப் பொருளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காகச் சில்லறை விற்பனவு நிலையமொன்று தொடர்பில் விற்பனையாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கூப்பன் ஒன்றைத் தனதுடைமையில் வைத்திருக்கின்ற, அல்லது ஏதேனும் பெற்றோலியப் பொருளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துக்காக ஏதேனும் செல்லுபடியற்ற கூப்பனைக் கொடுக்கின்ற எவரேனுமாள்; அல்லது

(ஆ) ஏதேனும் பெற்றோலியப் பொருளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக, அதிகாரியின் பணிப்பின்மூலம் அல்லது அதிகாரியின் பணிப்பின்கீழ் இல்லாதாக்கப்பட்டுள்ள ஏதேனும் கூப்பனைத் தனதுடைமையில் வைத்திருக்கின்ற அல்லது கொடுக்கின்ற எவரேனுமாள்,

தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஆளெவரும், நீதிமன்றம் திருப்திப்படும் வகையில் பின்வருமாறு எண்பிப்பின், இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கூப்பனைத் தனதுடைமையில் வைத்திருக்கின்றமை காரணமாக மட்டும் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் ஆகாது ; அதாவது—

(அ) புரியப்பட்டதாகச் சார்த்தப்பட்ட தவறு புரியப்பட்ட நேரத்தில் அவர் ஒரு விற்பனையாளராக இருந்தார் என்றும் அல்லது ஒரு விற்பனையாளரின் முகவராக அல்லது சேவையாளராக இருந்தார் என்றும், 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அல்லது 18 ஆம் பிரிவுடன் அல்லது 21 ஆம் பிரிவுடன் அல்லது 23 ஆம் பிரிவுடன் அல்லது 25 ஆம் பிரிவுடன் அல்லது 27 ஆம் பிரிவுடன் அல்லது 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஓர் அனுமதிப் பத்திரத்திலிருந்து அந்தக் கூப்பன் கிழித்தெடுக்கப்பட்டது என்றும், அத்தகைய விற்பனையாளர், முகவர் அல்லது சேவையாளர் என்ற தன்மையில் அந்தக் கூப்பன் தனதுடைமையில் இருந்தது என்றும்; அல்லது

(ஆ) புரியப்பட்டதாகச் சார்த்தப்பட்ட தவறு புரியப்பட்ட நேரத்தில் அவர் கூட்டுத்தாபனத்தின் முகவராக அல்லது சேவையாளராக இருந்தார் என்றும்—

(i) அந்தக் கூப்பன் 12ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அல்லது 18 ஆம் பிரிவுடன் அல்லது 21 ஆம் பிரிவுடன் அல்லது 23 ஆம் பிரிவுடன் அல்லது 25 ஆம் பிரிவுடன் அல்லது 27 ஆம் பிரிவுடன் அல்லது 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கூட்டுத்தாபனத்துக்குக் கொடுக்கப்பட்டிருந்தது என்றும், அத்தகைய முகவர் அல்லது சேவையாளர் என்ற தன்மையில் அந்தக் கூப்பன் தனதுடைமையில் இருந்தது என்றும் ; அல்லது

(ii) கூட்டுத்தாபனத்திலுள்ள வேறோர் ஆளுக்குப் பெற்ரோலியப் பொருளொன்றை விற்றதன்மேல் அல்லது விநியோகித்ததன்மேல் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அல்லது 18 ஆம் பிரிவுடன் அல்லது 21 ஆம் பிரிவுடன் அல்லது 23 ஆம் பிரிவுடன் அல்லது 25 ஆம் பிரிவுடன் அல்லது 27 ஆம் பிரிவுடன் அல்லது 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஓர் அனுமதிப் பத்திரத்திலிருந்து அந்தக் கூப்பன் கிழித்தெடுக்கப்பட்டது என்றும் ;

எண்பிப்பின் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

கூப்பன்க போலிபுனை கான கரு உடைமை வைத்திரு முதலியன

33. (1) அனுமதிப்பத்திரங்களை அல்லது கூப்பன்களைப் போலிபுனைவதற்குப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக்கூடிய ஏதேனும் தகட்டை, முத்திரையச்சை அல்லது முத்திரையை அல்லது வேறு கருவியை அல்லது பொருளைத் தயாரிக்கின்ற அல்லது பொய்யாகப் புனைகின்ற, அல்லது தனதுடைமையில் வைத்திருக்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்கான குற்றவழக்கு, சட்டத்துறைத் தலைமையதிபதியினாலன்றி அல்லது அவரது அனுமதியுடனன்றி, தொடுக்கப்படலாகாது.

போலிபுனை பட்ட கூ கள் முதலி றைக் கைப்பற்று

34. (1) பொலிசு நிலையமொன்றுக்குப் பொறுப்பாக உள்ளவரும், பொலிசுச் சார்சன்ற் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ளவருமான எவரேனும் பொலிசு அலுவலர், போலிபுனையப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் அல்லது போலிபுனையப்பட்ட கூப்பன்கள் என நம்புவதற்கு அவருக்குப் போதிய ஏதுக்கள் உள்ள எவையேனும் அனுமதிப்பத்திரங்களை அல்லது கூப்பன்களைக் கைப்பற்றுதல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) எவையேனும் போலிபுனையப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் அல்லது போலிபுனையப்பட்ட கூப்பன்கள், அல்லது அனுமதிப்பத்திரங்களை அல்லது கூப்பன்களைப் போலிபுனைவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் கருவி அல்லது எவையேனும் பொருட்கள், ஏதேனும் இடத்தில் மறைத்து வைக்கப்பட்டுள்ளன, வைத்திருக்கப்பட்டுள்ளன அல்லது வைப்பிலிடப்பட்டுள்ளன எனச் சந்தேகிப்பதற்கு உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள எவரேனும் பொலிசு அலுவலருக்கு நியாயமான ஏதுக்கள் இருக்கின்றன என்பதுடன், அத்தகைய அனுமதிப்பத்திரங்களை, கூப்பன்களை, கருவிகளை அல்லது பொருட்களைக் கைப்பற்றும் நோக்கத்துக்காக அத்தகைய இடத்தைத் தேடுவது உகந்ததெனவும், அவசரநிலை காரணமாக அல்லது வேறு நல்ல காரணத்துக்காக, குற்றவியல் நடவடிக்கைமுறை பற்றிய சட்டத்தின்கீழ் தேடுதல் ஆணையொன்றுக்கு விண்ணப்பிப்பது சாத்தியமற்றதெனவும் அவர் திருப்திப்படுவாரெனின், அத்தகைய அலுவலர், சந்தேகத்துக்கான தமது ஏதுக்களைப் பதிந்தபின்னர்—

(அ) அத்தகைய இடத்தினுள் நுழைந்து அவ்விடத்தைத் தேடலாம் என்பதோடு, அவ்விடத்தில் காணப்படுவனவும், போலிபுனையப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் அல்லது போலிபுனையப்பட்ட கூப்பன்கள் என்று, அல்லது அனுமதிப்பத்திரங்களை அல்லது கூப்பன்களைப் போலிபுனைவதற்குப் பயன்படுத்தப்படுவன என்று நியாயமாக நம்பப்படும் எவையேனும் அனுமதிப்பத்திரங்களை, கூப்பன்களை, கருவிகளை அல்லது பொருட்களைக் கைப்பற்றலாம் ; அல்லது

(ஆ) இந்த உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கும்படி எழுத்திலான கட்டளைமூலம் வேறெவரேனும் பொலிசு அலுவலருக்கு அதிகாரமளிக்கலாம்.

4—எ 40766 (04/79)

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் கைப் பற்றப்பட்ட எல்லா ஆவணங்களும் அல்லது பொருட்களும், அத்துடன் அத்தகைய பொருட்கள் பற்றிய ஒரு திரவும், கைப்பற்றுகை நடை பெற்ற இடத்தில் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் உடனடியாக எடுத்துச் செல்லப்படுதல் வேண்டும் என்பதோடு, அந்த நீதிமன்றம் கட்டளைமூலம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் அவை கையாளப்படுதலும் வேண்டும்.

பணிப்புக்கள் விடுப்பதற்கு அதிகாரிக்குள்ள தத்துவம்.

35. ஏதேனும் பெற்றோலியப் பொருளின் எவரேனும் பாவனையாளர் அல்லது விற்பனையாளர் அத்தகைய பெற்றோலியப் பொருளை வீண்விரய மாக்கும் வகையில் அதனைக் களஞ்சியப்படுத்துகின்றார் என்று அல்லது பயன்படுத்துகின்றார் என்று அதிகாரி திருப்திப்படுமிடத்து, அத்தகைய வீண்விரயத்தை அல்லது பயன்பாட்டைத் தடுப்பதற்கு, தவிர்ப்பதற்கு அல்லது நீக்குவதற்கு அவசியமென அந்த அதிகாரி கருதக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்களை அதிகாரியானவர் அத்தகைய பாவனையாள ருக்கு அல்லது விற்பனையாளருக்கு விடுக்கலாம் என்பதுடன், அத்தகைய ஒவ்வொரு பணிப்புக்கும் இணங்கியொழுகுவது அத்தகைய பாவனையாள ரின் அல்லது விற்பனையாளரின் கடமையாதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ் அதில் கூறப்பட்ட குறித்த சில நிகழ்வுகள் பற்றி முடிவான சான்றாதல்.

36. இச்சட்டத்தின்கீழ்த் தொடுக்கப்பட்ட ஏதேனும் குற்றவழக்கில் ஏதேனும் திரவம் அல்லது வாயு பெற்றோலியப் பொருளா அல்லவா என் பது பற்றி அல்லது ஒரு பெற்றோலியப் பொருள் எவ்வகுதியைச் சேர்ந் துள்ளது என்பதுபற்றி ஏதேனும் பிரச்சினை எழுமிடத்து, அத்தகைய திரவம் அல்லது வாயு அத்தகைய பெற்றோலியப் பொருள்தான் என்ற பொருள் கொண்டதும், அல்லது ஒரு பெற்றோலியப் பொருள் இன்ன வகுதி யைச் சேர்ந்துள்ளது என்று குறித்துக்காட்டுகின்றதும், கூட்டுத்தாப னத்தின் பணிப்பாளர் சபைத் தவிசாளரின் கைபட்டதெனக் கொள்ளப் படுகின்றதுமான அல்லது அத்தகைய தவிசாளரால் அதற்கென அதிகார மளிக்கப்பட்ட எவரேனும் ஆளின் சான்றிதழொன்று, அதில் கூறப்பட்ட நிகழ்வுகள் பற்றிய முடிவான எண்பிப்பாகச் சான்றில் ஏற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும்.

தவறுகளும் தண்டங்களும்.

37. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுக்கும் முரணாகச் செய லாற்றுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண் டும்.

(2) மூன்றும் உட்பிரிவில் அல்லது (4) ஆம் உட்பிரிவில் அல்லது (5) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றல்லாததும் இச்சட் டத்தின் கீழானதுமான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆள் ஒவ் வொருவரும், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு, அல்லது இரண்டு ஆண்டு களுக்கு மேற்படாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற் றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(3) (அ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்கீழ்ச் செயலாற்றுகின்ற அதிகாரியை அல்லது எவரேனும் பெற்ரோலியக் கட்டுப்பாட்டாளரை, அல்லது பிரதி அல்லது உதவிப் பெற்ரோலியக் கட்டுப்பாட்டாளரை அல்லது எவரேனும் அதிகாரம்பெற்ற அலுவலரை எதிர்க்கின்ற அல்லது தடுக்கின்ற எவரேனுமாள்; அல்லது

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் அவரினால் கொடுத்துதவப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டைக் கொடுத்துதவத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற எவரேனுமாள், அல்லது இச்சட்டத்தின் கீழ்த் தயாரிக்கப்படும் அத்தகைய ஏதேனும் விபரத்திரட்டில் அல்லது செய்யப்படும் ஏதேனும் விண்ணப்பத்தில் அவர் அறிந்தவரை பொய்யானதாகவுள்ள அல்லது பிழையானதாகவுள்ள ஏதேனும் பதிவீட்டைச் செய்கின்ற அல்லது கூற்றை அளிக்கின்ற எவரேனுமாள்; அல்லது

(இ) குறிப்பிட்ட ஏதேனும் நோக்கத்துக்காகப் பெற்ரோலியப் பொருள் தேவைப்படுகின்றது என்ற பகர்வின்மீது ஓர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு, அந்த அனுமதிப்பத்திரத்தின்கீழ் கொள்வனவு செய்யப்படவுள்ள அல்லது கொள்ளப்படவுள்ள பெற்ரோலியப் பொருளை, வேறேதேனும் நோக்கத்துக்காகப் பயன்படுத்துகின்ற எவரேனுமாள்; அல்லது

(ஈ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்கீழ்ச் செயலாற்றுகின்ற அதிகாரியினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற எவரேனுமாள்,

தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு, அல்லது ஓராண்டுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு முரணாக அல்லது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரத்தின் நியதிகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(5) (அ) ஏதேனும் சில்லறை விற்பனவு நிலையத்தில் வைத்திருக்கப்பட்ட அல்லது பேணிவரப்பட்ட ஏதேனும் அளவிடும் கருவி பொய்யானதாகவுள்ளதென 15 ஆம் பிரிவின்கீழான, அல்லது 18 ஆம் பிரிவுடன் அல்லது 21 ஆம் பிரிவுடன் அல்லது 23 ஆம் பிரிவுடன் அல்லது 25 ஆம் பிரிவுடன் அல்லது 27 ஆம் பிரிவுடன் அல்லது 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 15 ஆம் பிரிவின்கீழான சோதனையின்மீதும் பரிட்சித்தலின் மீதும் எந்நேரத்திலும் காணப்படுமிடத்து, அந்தச் சில்லறை விற்பனவு நிலையத்துக்கு அப்போதைக்குப் பொறுப்பாகவுள்ள ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு, அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத்துக்கு இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(ஆ) (அ) என்னும் பந்தியின் நோக்கத்துக்காக, அளவிடும் கருவியொன்று, ஒழுங்குவிதியினால் விதந்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வழு எல்லைகளினுள் செம்மையாக விநியோகிக்காவிடின் பொய்யானதெனக் கருதப்படுதல் வேண்டும்.

ஆட்கள் குழுக்களினாற் புரியப்படும் தவறுகள்.

38. இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து—

(அ) அந்தக் குழு கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருப்பின், அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அந்தக் குழுவின் பணிப்பாளராக, செயலாளராக அல்லது அவரையொத்த வேறு அலுவலராக இருந்த ஆள் ஒவ்வொருவரும்; அல்லது

(ஆ) அந்தக் குழு கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாக இல்லாதிருப்பின், அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அந்தக் குழுவின் உறுப்பினராக இருந்த ஆள் ஒவ்வொருவரும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தவறு தமது சம்மதமோ அல்லது உட்கையோ இன்றிப் புரியப்பட்டதென்றும் தமது பணிகளின் தன்மையைக் கவனத்துட்கொண்டும் எல்லாச் சூழ்நிலைகளிலும், அந்தத் தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்குத் தாம் பிரயோகித்திருக்கவேண்டிய அத்தகைய எல்லாக் கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென்றும் எண்பித்தாலொழிய, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்துக்கு எதிரான அல்லது விற்பனையாளர்களுக்கு எதிரான வழக்குகள் மீதான மட்டுப்பாடுகள்.

39. கூட்டுத்தாபனத்தினால் அல்லது எவரேனும் விற்பனையாளரினால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட ஏதேனும் செயலுக்காக, அத்தகைய செயல் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுக்கும் இணங்கியொழுகும் நோக்கத்துக்காகச் செய்யப்பட்டிருப்பின் அல்லது செய்யாது விடப்பட்டிருப்பின் (விடயத்துக்கேற்ப), அத்தகைய கூட்டுத்தாபனத்துக்கு எதிராக அல்லது விற்பனையாளருக்கு எதிராகக் குடியியல் வழக்கெதுவும் தொடுக்கப்படுதலோ அல்லது நடாத்தப்படுதலோ ஆகாது.

40. (1) இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்கு விதிகள்.

(2) குறிப்பாகவும், (1) ஆம் உட்பிரிவினால் அவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தில் கூறப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்த ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் இயன்றளவு விரைவில் அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

41. இச்சட்டத்தின் ஏற்பாடுகள், ஏதேனும் பெற்றோலியப் பொருளின் பாவனையாளர் ஒருவர் என்ற தன்மையில் அரசாங்கத்துக்கும் அரசாங்கம் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும். அரசாங்கத்துக்கு இச்சட்டம் ஏற்புடையதாதல்.

42. பெற்றோல் (வழங்கல்களைக் கட்டுப்படுத்தல்) கட்டளைச்சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது. 174 ஆம் அத்தியாயத்தை நீக்குதல்.

43. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் உள்ள எது எப்படியிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுக்குமிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை இருக்கும் சந்தருப்பத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றலும் வேண்டும். இச்சட்டம் வேறு எழுத்திலான சட்டத்திலும் மேலோங்கி நிற்றல்.

44. (1) இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய— பொருள்கோடல்.

"வானூர்தி" என்பது கெலிக்கொப்ரர் ஒன்றையும் உள்ளடக்கும்;

"அங்கீகரிக்கப்பட்ட பாவனையாளர்" என்பது ஏதேனும் பெற்றோலியப் பொருளின் பாவனையாளராக இச்சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ளவராகக் கருதப்பட்ட ஆளொருவர் என்று பொருளாகும்;

"அதிகாரம்பெற்ற அலுவலர்" என்பது பொலிசுப் பரிசோதகர் பதவி வரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள எவரேனும் பொலிசு அலுவலர் என்று பொருளாகும் என்பதுடன், அதிகாரியின் எழுத்திலான அதிகாரத்தின்கீழ்ச் செயலாற்றுகின்ற வேறு எவரேனுமாளையும் உள்ளடக்கும்;

"கூட்டுத்தாபனம்" என்பது 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனம் என்று பொருளாகும்;

"மோட்டார் வாகனம்" என்பது மோட்டார் வாகனச் சட்டத்தில் வரைவிலக்கனம் கூறப்பட்டவாறான ஒரு மோட்டார் வாகனம் என்று பொருளாகும்;

"அளவிடும் கருவி" என்பது ஏதேனும் பெற்ரோலியப் பொருளை அளப்பதற்கெனப் பயன்படுத்தப்படும் அல்லது பேணிவரப்படும் ஏதேனும் கொள்கலத்தை, பம்பியை அல்லது வேறு உபாயத்தை உள்ளடக்கும்;

"அனுமதிப்பத்திரம்" என்பது இச்சட்டத்தின்கீழ் அதிகாரியினால் வழங்கப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரம் என்று பொருளாகும்;

"பெற்ரோலியப் பொருள்" என்பது பெற்ரோல், மண்ணெண்ணெய், தன்னியக்கத் திசல் எண்ணெய், பாரத் திசல் எண்ணெய், உலையெண்ணெய், திரவப் பெற்ரோலிய வாயு அல்லது வானூர்திச் சுழலிக்கான எரிபொருள் என்று பொருளாகும்;

"பொறித்தொகுதி அல்லது எந்திரத்தொகுதி" என்பது வெளிச்சமூட்டும் நோக்கத்துக்காக அல்லது சமைக்கும் நோக்கத்துக்காக பயன்படுத்தப்பட்ட ஏதேனும் விளக்கை, கனலடுப்பை அல்லது வேறு உபாயத்தை உள்ளடக்கும்;

"ஒழுங்குவிதி" என்பது 40 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஓர் ஒழுங்குவிதி என்று பொருளாகும்;

"சில்லறை விற்பனவு நிலையம்" என்பது சேவை நிலையம் அல்லது நிரப்பும் நிலையம் என்று பொருளாகும் என்பதுடன், ஏதேனும் பெற்ரோலியப் பொருள் வேறு எந்த வளவில் விற்பனையாளரால் விற்கப்படுகின்றதோ அந்த வளவையும் உள்ளடக்கும்;

"விற்பனையாளர்" என்பது சில்லறை விற்பனவு நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது கூட்டுத்தாபனத்தின் அதிகாரம்பெற்ற விற்பனையாளரொருவரினால் எந்த ஆளுக்கு ஏதேனும் பெற்ரோலியப் பொருள் விற்கப்படுகின்றதோ அல்லது விநியோகிக்கப்படுகின்றதோ அந்த ஆள் என்று பொருளாகும்.

(2) ஓர் அனுமதிப்பத்திரம் பின்வரும் சந்தர்ப்பங்களில் செல்லுபடியான அனுமதிப்பத்திரமாகக் கருதப்படும்; அதாவது—

(அ) அந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டபோது அந்த அனுமதிப்பத்திரத்துடன் இணைந்ததாயிருந்த ஏதேனும் கூப்பன் அந்த அனுமதிப்பத்திரம் எந்தப் பெற்ரோலியப் பொருள் தொடர்பில்

வழங்கப்பட்டதோ அந்தப் பெற்றோலியப் பொருளைக் கொள் வனவு செய்யும் நோக்கத்துக்காக ஒப்படைக்கப்பட்டிராமலும்; அத்துடன்

(ஆ) அந்த அனுமதிப்பத்திரம் எந்தக் காலப்பகுதி தொடர்பில் வழங் கப்பட்டதோ அந்தக் காலப்பகுதி முடிவுறுமலும்,

இருப்பின் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அந்த அனுமதிப்பத்திரம் செல்லுபடியான அனுமதிப்பத்திரம் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஒரு கூப்பன் பின்வரும் சந்தருப்பங்களில் செல்லுபடியான கூப் பனைக் கருதப்படும்; அதாவது—

(அ) செல்லுபடியான ஓர் அனுமதிப்பத்திரத்துடன் இணைந்ததாயும்;

(ஆ) அந்த அனுமதிப்பத்திரம் எந்தப் பெற்றோலியப் பொருள் தொடர் பில் வழங்கப்பட்டதோ அந்தப் பெற்றோலியப் பொருளைச் சில் லறை விற்பனவு நிலையமொன்றிலிருந்து கொள்வனவுசெய்யும் நோக்கத்துக்காக அல்லது பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக அந்தக் கூப்பன் ஒப்படைக்கப்படாமலும்; அத்துடன்

(இ) அத்தகைய கூப்பன் எந்தக் காலப்பகுதி தொடர்பில் வழங்கப்பட் டதோ அந்தக் காலப்பகுதி முடிவுறுமலும்,

இருப்பின் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அந்தக் கூப்பன் செல்லு படியான கூப்பன் எனக் கருதப்படுதல் வேண்டும்.